# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 44
மே 2012

தொகுப்பு : **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**ஏசாயா**

2151 பாவத்தோடே பாவத்தைக் கூட்டாதே (30:1)
2152 குதிரைகள் மேல் நம்பிக்கை வையாதே (31:1)
2153 இரதங்கள் அநேகமாயிருப்பதினால் அவைகளை நாடாதே (31:1)
2154 குதிரை வீரர் மகாபெலசாலிகளாயிருப்பதினால் அவர்களை நம்பிக் கொண்டிராதே (31:1)
2155 தீமை செய்யாதே (31:2)
2156 எளியவர்களைக் கெடுக்கும்படி தீவினைகளை யோசியாதே (32:7)
2157 கர்த்தரை நிந்தித்து தூஷியாதே (37:23)
2158 கர்த்தருக்கு விரோதமாய் உன் சத்தத்தை உயர்த்தாதே 37:23)
2159 முந்தினவைகளை நினைக்க வேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம். (43:18)
2160 கர்த்தரைக் குறித்து மனஞ்சலித்துப் போகாதே (43:22)
2161 விக்கிரகங்களை உருவாக்காதே (44:9,16); வணங்காதே (44:19)
2162 குறி சொல்லாதே (44:25)
2163 விக்கிரகத்தைச் சுமந்து அதைத் தொழுது கொள்ளும் அறிவில்லாதவனாயிராதே (45:20, 57:6)
2164 உன் துன்மார்க்கத்திலே திடநம்பிக்கையாயிராதே (47:10)
2165 துரோகம் பண்ணாதே
2166 மீறுகிறவனென்று பெயர் பெறாதே (44:8)
2167 அசுத்தமானதைத் தொடாதிரு (52:11)
2168 கொடுமை செய்யாதே (53:9)
2169 உனக்கும் உன் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்கும் அக்கிரமங்களைச் செய்யாதே (59:2)
2170 உனக்குச் செவிகொடாதபடிக்கு கர்த்தருடைய முகத்தை உனக்கு மறைக்கும் பாவங்களைச் செய்யாதே (59:2)
2171 மாயையை நம்பாதே (59:4)
2172 தீமையை கர்ப்பந்தரியாதே (59:4)
2173 அக்கிரமக் கிரியைகள் வேண்டாம் (59:6)
2174 அக்கிரம நினைவுகள் வேண்டாம் (59:7)
2175 நியாயமில்லாத நடை வேண்டாம் (59:8)
2176 உன் பாதைகளை கோணலாக்கிக் கொள்ளாதே; அவைகளில் நடந்தால் சமாதானத்தை அறியாய் (59:8)
2177 அந்தகாரத்தில் நடவாதே (59:9)
2178 பதறாதே; விசுவாசிக்கிறவன் பதறான் (28:16)
2179 பொய் என்னும் அடைக்கலத்தை நாடாதே (28:17)
2180 தகப்பனை நோக்கி: ஏன் ஜநிப்பித்தாய் என்றும் தாயை நோக்கி : ஏன் பெற்றாய் என்றும் சொல்லாதே (45:10)



2181 முரட்டு இருதயமுள்ளவனாயிராதே (46:12)
2182 நீதிக்குத் தூரமாகாதே (46:12)
2183 முதிர்வயதுள்ளவர்கள் மேல் உன் நுகத்தை மகா பாரமாக்காதே (47:6)
2184 விசாரமில்லாமல் வாழாதே (47:8)
2185 உன்வாயில் வஞ்சனை (பொய்) கூடாது (53:9)
2186 திருப்தி செய்யாத பொருளுக்காக உன் பிரயாசத்தைச் செலவழியாதே (55:2)
2187 நித்திரைப் பிரியனாயிராதே (56:10)
2188 திருப்தியடையாத பெருவயிற்று நாய்கள் போலிராதே (56:11)
2189 பகுத்தறிவில்லாத மேய்ப்பனாயிராதே (56:11)
2190 நீ உபவாசிக்கும் நாளிலே உன் இச்சையின்படி நடவாதே; உன் வேலைகளையெல்லாம் கட்டயமாய்ச் செய்யாதே (58:3)
2191 வழக்காடவும், வீண்சண்டையிடவும், கொடும் கையால் தாக்கவும் வேண்டாம் (58:4)
2192 உன் இனத்தாருக்கு (relatives) உன்னை ஒளிக்காமலிரு (do not refuse to help) (58:7)
2193 உன் நடுவில் இருக்கும் நுகத்தை அகற்றிவிடு (58:9)
2194 சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டுவதை (விரல் நீட்டுதல்) நிறுத்திவிடு (58:9)
2195 பொல்லாதவைகளைப் (நிபச்சொல்) பேசுவதை நிறுத்திவிடு (58:9)
2196 ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதே; உன் வழிகளின்படி நடவாதே; உன் சொந்தப் பேச்சைப் பேசாதே (58:13)
2197 பொய்யைப் பேசும் உதடுகள் வேண்டாம் (59:3)
2198 நியாயக்கேட்டை வசனிக்கும் நாவு வேண்டாம் (59:3)
2199 அபத்தமானதைப் பேசாதே (59:4)
2200 கொடுமையாகவும் கலகமாகவும் பேசாதே (59:13)

---

## ஓர் சாட்சி

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர் அவர்களுக்கு,

என்னுடைய பெயர் விமலா. நான் பெரியநாயகபுரம் ஆலயத்தில் நடக்கும் தூத்துக்குடி முழு இரவு ஜெபம் மூலம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு இரட்சிக்கப்பட்டேன். சங்கீதம் 103ன் படியாக அவர் என் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, என் நோய்களையெல்லாம் குணமாக்கி, என் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, என்னைக் கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டினார். நானோ அவர் செய்த நன்மைகளை நினைக்காமல் போனேன். தேவனோ என்னை இரட்சிக்க சித்தமாகி கடந்த 7-2-2012 அன்று அதிகாலையில் Bible படிக்க எடுக்கும்பொழுது Bible-ஐ என்னையும் அறியாமல் கீழே போட்டுவிட்டேன். அப்பொழுதே என்னுடைய இடதுகை செயலிழந்து போய்விட்டது. இதை நான் அறியாதவளாய் Toilet-குள் சென்று விட்டேன். Toilet-க்குள் சென்ற என்னால் என் மூளை அறிய அப்படியே உட்கார்ந்து விட்டேன். இயேசு அப்பாவின் பெரிதான கிருபையினால் Toilet-ஐ நான் பூட்டவில்லை. என்னுடைய வாயும் கோணலானது. உள்ளேயே நான் புலம்பிக் கொண்டு இருந்தேன். என்னுடைய புலம்பல் சத்தம் கேட்டு என்னுடைய Husband என்னை வெளியே கொண்டு வந்து, என்னுடைய

தொடர்ச்சி 13ம் பக்கம்

வாலிபர் பக்கம்

# நீ மாதிரியாயிரு

## *Be an example of the believers in Spirit*

*சகோ. S. ஜெபராஜ்* President, Grace Ministries

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளுக்கு இன்ப இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். உங்களை ஒருவரும் அசட்டைப்பண்ணாதபடிக்கு வார்த்தையிலும் நடக்கையிலும் அன்பிலும் ஆவியிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாய் இருப்பதைக் குறித்து கடந்த இதழ்கில் கற்றுக்கொள்ளும்படியாய் தேவன் கிருபை செய்தார். கற்றவைகளை நீங்கள் கடைபித்து வருவீர்கள் என்று விசுவாசித்து தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். இந்த இதழில் விசுவாசத்தில் மாதிரியாய் இருப்பதைக் குறித்து கற்றுக்கொள்ள தேவ ஆவியானவர் உதவி செய்வார்.

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. விசுவாசமுமாயிருக்கிறது (எபி. 11:1) (faith is the assurance of the things we hope for) விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி. 11:6) தேவனோடு உள்ள உறவின் அளவுகோலாயிருக்கிறது விசுவாசம். எந்த அளவு நீங்கள் தேவனை விசுவாசிக்கிறீர்களோ அந்த அளவு தேவன் உங்கள் மேல் பிரியமாயிருப்பார். முன்மாதிரியான விசுவாசத்தின் தன்மைகள் எப்படியிக்க வேண்டும் என்பதை தெளிவாக அறிந்து, உணர்ந்து நீங்கள் விசுவாசிகளுக்கு விசுவாசத்தில் மாதிரியாக இருக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார்.

***இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் :***

விசுவாசம் அதாவது FAITH என்பது Forsaking All I Trust Him எல்லாவற்றையும் விட்டு நான் அவரையே நம்புகிறேன். பவுல் அப்போஸ்தலன் லீஸ்திராவிலே தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாயிருந்த ஒருவனை உற்றுப்பார்த்து இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு அவனை குதித்தெழுந்து நடக்கும்படி செய்கிறார் (அப். 14:8-10) அவனுக்குள்ளே துளிர்த்திருந்த விசுவாசத்தை பவுல் காண முடிந்தது அவனது விசுவாசம் செயல்முறைக்கு கொண்டுவரப்பட்டு அது யாவருக்கும் முன்பாக வெளிப்பட்டது. இந்த விசுவாசம் அவரது ஆத்துமாவிலும் சரீரத்திலும் இரட்சிப்பை கொண்டு வந்து பன்னீரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ள ஸ்திரீ அவர் பின்னாலே வந்து அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். இயேசு திரும்பி, அவளைப்பார்த்து மகளே! திடன்கொள் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரமுதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள் (மத். 9:20-22). வியாதி மனுஷனுடைய வாழ்க்கையை கலக்குகிறது நோய்கள் குடும்ப அமைதியை கெடுக்கிறது; உள்ளத்தில் சோக உணர்வை உண்டாக்குகிறது. உங்களுடைய விசுவாசம் இவைகளையெல்லாம் மேற்கொள்ள வல்லமை உள்ளது என்பதை மறந்து போக வேண்டாம்.

தேவன் பேரில் வைக்கும் விசுவாசம் :

தேவன் பேரில் வைக்கும் விசுவாசம் என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல் பூரணராகும்படி கடந்து போவோமாக (எபி. 6:1,2). விசுவாசிகளின் தகப்பனான ஆபிரகாமை குறித்து இப்படி வாசிக்கிறோம். ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான். அதை



அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். (ஆதி. 15:6) தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான் (ரோமர் 4:20,21) சகல ஜாதிகளும் விசுவாசத்திற்கு கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. நீங்கள் தேவன்பேரில் வைக்கும் விசுவாசம் எவ்வளவு மகிமை உள்ளது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இந்த விசுவாசம் உங்களை, தேவனை, நீங்கள் அங்கீகரிக்கும்படிச் செய்கிறது. யோபு சொல்லுகிறார். தேவன் கையில் நன்மையை பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ? (யோபு 2:10). தேவன் யோபுவைக் குறித்து சாட்சி கொடுத்தார். (யோபு 2:3) சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ கூறினார்கள் : நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் விடுவிக்காமல் போனாலும் (தானி. 3:17) வாலிப சகோதர சகோதரிகளே! நீங்கள் தேவன் பேரில் வைக்கும் விசுவாசம் உங்களில் கீழ்ப்படிதலையும், சாட்சியையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வருகிறது.

ஆவியின் வரமாகிய விசுவாசம்

ஒருவனுக்கு அந்த ஆவியினாலே விசுவாசம் அளிக்கப்படுகிறது. (1கொரி. 12:9). இந்த விசுவாசம் தேவனுடைய பரிசுத்த ஆவியின் நிறைவினால் அருளும் வரங்களில் ஒன்றாக உங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. "எலியா நம்மைப்போல பாடுள்ள மனுஷனாயிருந்தும்" (யாக். 5:17). நம்மைப்போல சுபாவமுள்ள மனுஷனாயிருந்தும், ஆவியின் வரமாகிய விசுவாசத்தின் கிரியையினால் மழையை நிறுத்துகிறான்; மறுபடியும் மழை பெய்யும்படி செய்கிறான். விதவையின் வீட்டில் பானையின் மா செலவழிந்து போகவில்லை. கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை (1இரா. 17:14). அவள் மகன் மரித்தபோது, பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பி வரும்படி செய்தார் எலியா. இது பெலமுள்ள விசுவாசம். அவிசுவாசத்திற்கு அப்பாற்பட்ட விசுவாசம். ஆவியின் வரமாகிய விசுவாசத்தை நம்முடைய வாழ்க்கையில் பயிற்சிக்க வேண்டும். தேவனை பார்த்தர் கண்கள் சூழ்நிலை மாறும்போது வெட்கப்பட்டு போவதில்லை இந்த விசுவாசம் நம்முடைய அன்றாட கிரியைகளில் வெளிப்பட வேண்டும்.

ஆவியின் கனியாகிய விசுவாசம்

ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்.... (கலா. 5:22). அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும் (1கொரி. 13:7). இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான். ஆபியின் கனியாகிய விசுவாசம் பதறாது. ஆபிரகாமுடைய விசுவாசம் தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக்கொடுக்கும்படி செய்து (எபி. 11:17-19) அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் (மத். 7:20) இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் (லூக். 3:9). கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி சுத்தம் பண்ணுகிறார் (யோவா. 15:2). ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றவர்களுக்கு அடையாளம் 'கனி' நீங்கள் விசுவாசத்தில் மாதிரியாயிருக்கும்படி ஆவியின் கனி கொடுக்க தேவன் விரும்புகிறார்.

மேன்மையான விசுவாசம் :

விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள். வாக்குத்தத்தத்தங்களைப் பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்... வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள். (எபி. 11:33-35) விசுவாசத்தினால் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள். (எபி. 11:16) இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் மோசே. தன் மேன்மையான விசுவாசத்தினால் (எபி. 11:24-26). ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். நீங்கள் ஒவ்வொருவரும் விசுவாசத்தில் மாதிரிகளாயிருந்து தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள். இன்னும் எதில் நாம் மாதிரியாயிருக்க வேண்டுமென அடுத்த இதழில் சிந்திப்போம். தேவன்தாமே உங்களை விசுவாசத்தில் வழி நடத்துவராக! ஆமென்.

## *பணித்தளங்களில் – தேவனைத் துதிப்போம்!*

### திருநெல்வேலி மாவட்டம்

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை**

இங்கு ஊழியம் செய்கிற ஊழியர் சகோ. மோசஸ் பிள்ளைகளின் படிப்பிற்காக தேவன் செய்த நன்மைகளுக்காக கர்த்தரைத் துதிப்போம்! சகோ. பரமானந்தம் இவர்கள் விவசாயத்தில் நல்ல விளைச்சலைத் தந்ததற்காக... சகோதரி. தேவபாக்கியம் விவசாயத்தில் நல்ல விளைச்சலை தந்ததற்காக... சகோ. டேவிட் தேர்வில் நன்றாக எழுத கிருபை செய்ததற்காக... சிறுபிள்ளைகளுக்காக... வாலிப பிள்ளைகளுக்காக... இங்கு சகோ. ஜோசப், சகோதரிகள் சாராள், செண்பகக்கனி இவர்களின் விவசாயத்தை தேவன் ஆசீர்வதித்ததற்காக... சகோ துரைக்கு ஏற்ற துணை தந்ததற்காக...

பணித்தளம் : **தாதன்குளம்**

சகோதரி. கவிதாவின் சுகப்பிரசவத்திற்காக ஜெபித்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு பெண் குழந்தையைக் கொடுத்ததற்காக...

பணித்தளம் : **புதுக்கோட்டை**

சகோ. ஜெபராஜ்க்கு கிடைத்த பரிபூரண சுகத்திற்காக... சகோதரி. ஸ்டெல்லாவிற்கு கிடைத்த சுகத்திற்காக... சகோதரி. ரூபிக்கு கொடுத்த நல்ல சமாதானத்திற்காக...

### விருதுநகர் மாவட்டம்

பணித்தளம் : **ஜமீன் சல்வார்பட்டி**

விசுவாச குடும்பங்கள் தொடர்ந்து ஆலய ஆராதனைக்கு கடந்து வரவும், சத்தியத்தை கேட்கவும் செய்த, தேவனைத் துதிப்போம்! சபைக்கு புதிதாக சகோதரி தமயந்தி தொடர்ந்து சபைக்கு வருகிறதற்காக...

பணித்தளம் : **அய்யனேரி**

புளிங்குளத்தில் நடைபெற்ற சிறுவர் கூடுகைக்காக... அய்யனேரியில் புதிய குடும்பத்தை சந்தித்து சுவிசேஷம் சொல்ல கர்த்தர் தந்த திறந்த வாசலுக்காக... சகோதரி.



சோபாவுக்கு கர்த்தர் சுகபிரசவத்தில் இரட்டை குழந்தையை தந்ததற்காக... சகோதரி. செல்வமணிக்கு மார்பு வலியிலிருந்து கிடைத்த விடுதலைக்காக...

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

சகோ. வைரமுத்துவுக்கு புதிய இல்லம் கட்ட தேவன் உதவி செய்ததற்காக... சகோதரி. மாரியம்மாளுக்கு கல் அடைப்பிலிருந்து ஆபரேஷன் செய்யாதபடி தேவன் சுகம் கொடுத்ததற்காக... சகோதரி. ஜெயலெட்சுமி வீட்டில் நடக்கிற ஆராதனையில் கலந்து கொள்ளும் சிறுவர் சிறுமிகளுக்காக... சகோதரி. லட்சுமி வயிற்றில் ஏற்பட்ட சாதாரண கட்டியை ஆப்ரேஷன் செய்து சுகம் கொடுத்ததற்காக...

பணித்தளம் : **சிவகாசி**

சகோதரி கிறிஸ்டி அவர்களுக்கு சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தையை கொடுத்ததற்காக... சகோதரி. லீதியாளுடைய திருமணத்திற்காக... சகோதரி. எஸ்தருக்கு தேர்வில் கொடுத்த வெற்றிக்காக... சகோதரி. ராஜகாமுவின் கணவருடைய குடிப்பழக்கத்தை கர்த்தர் மாற்றியதற்காக...

பணித்தளம் : **என். திருவேங்கடபுரம்**

சகோ. பொன்னுச்சாமிக்கு ஆப்ரேஷன் முடிந்து படுக்கையிலிருந்து எழுந்து நடமாட, ஆலயத்திற்கு வர கர்த்தர் தந்த கிருபைக்காக... சகோதரி நேசமணி அம்மாவிற்கு சிறுநீரில் இரத்தமாக போனது சுகம் பெற்றதற்காக... சகோதரி செல்கி மகனுக்கு காது கேட்கச் செய்ததற்காக... சகோ. இளங்கோ மகளுக்கு சுகப்பிரசவம் ஆனதற்காக...

பணித்தளம் : **பழைய அப்பநேரி**

கர்த்தருடைய பெரிய கிருபையால் தூத்துக்குடி குழுவுடன் பெரிய கிருபையால் தூத்துக்குடி குழுவுடன் ஒன்று சேர்ந்து இந்த அப்பனேரியை சுற்றி உள்ள அனைத்து கிராமங்களிலுள்ள சென்று கைப்பிரதி கொடுத்து சிறுவர் மற்றும் ஒலிபெருக்கி மூலம் இயேசுவின் அன்பை அறிவித்தோம். தேவன் ஊழியங்களை ஆசீர்வதித்தற்காக... புளியங்குளம் கிராமத்தில் நடைபெற்ற சிறுவர் முகாமுக்காக... தேவன் தடைகளை நீக்கியதற்காக...

### திருநெல்வேலி மாவட்டம்

பணித்தளம் : **திருவேங்கடம்**

சகோ. தேவபிச்சை கண் ஆப்பரேஷனில் தேவன் கூட இருந்து நல்ல பார்வை கிடைத்ததற்காக VBS ஊழியத்திற்காக நடைபெற்ற உபவாச ஜெபத்திற்காக...

### திண்டுக்கல் மாவட்டம்

பணித்தளம் : **தொப்பம்பட்டி**

சகோதரிகள் பொன்னி, அழகம்மாள், பேச்சியம்மாள் ஆகியோருக்குக் காணப்பட்ட பாத எரிச்சலில் தேவன் சுகம் கொடுத்தப்படியால் தேவனைத் துதிப்போம். சகோ. ரகுவரனுக்கு ஏற்பட்ட காய்ச்சல் சுகமானபடியால் தேவனைத் துதிப்போம்.

### ஈரோடு மாவட்டம்

பணித்தளம் : **பொங்கலூர்**

சகோதரி விஜயாவின் திருமணத்தை கர்த்தர் நல்லபடியாய் நடத்தி வைத்ததற்காக... விசுவாச சகோதரிகள் நடத்தி வரும் ஜெப கூட்டத்திற்காக... சகோ. ராமசாமி தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும்போது பெரிய நல்லபாம்பு ஒன்று இரண்டு கால்களுக்கும் இடையே கடந்து சென்றது. அவருக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் கர்த்தர் காத்ததற்காக...

சகோதரி. ஈஸ்வரியின் 2 வயது குழந்தையின் பின் தலையில் கட்டி இருந்தது, எண்ணெய் பூசி ஜெபித்தபோது அந்த கட்டி மறைந்ததற்காக... விசுவாசியின் ஆடு ஒன்று திடீரென வயிறு வீங்கி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபோது விசுவாசிகளே ஜெபித்து எண்ணெய் குடிக்க கொடுத்த உடன் தானே அந்த ஆடு பூரண சுகம் பெற்றதற்காக...

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி**

சகோதரி ரோஜா கணவருக்கு JCB வண்டி ஓட்டும் வேலை கிடைத்ததற்காக

## *முழங்காலில் தேவனோடு....*

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **ஆண்டாள்நகர்**

சகோதரி. மெரின் கிரேட் அவர்கள் சகோதரன் முனியசாமி இரட்சிக்கப்பட... சகோதரி. லீதியாளின் திருமண தேவை சந்திக்கப்பட.... சகோதரி நகோமியின் உடல்நலத்துக்காக... இங்கு ஞானஸ்நானம் எடுத்த 37 நபர்களும் ஆலயத்திற்குக் கடந்து வர... சகோ. செல்லையா மனம் திருந்த.... இரட்சிக்கப்பட... ஊழியரைக் கசந்து கொள்ளாதிருக்க... இங்கு சகோ. பால்ராஜ்க்கு சிறுநீரக பிரச்சனை நீங்க... இங்கு VBS நடத்த ஆசிரியர்கள் கடந்து வர... VBS 8 கிராமங்களில் நடத்தப்பட...

பணித்தளம் : **பேட்மாநகரம்**

நடத்த தன்னார்வ ஊழியர்களுக்கா... சகோ. ஜோசப் அவர்களுக்கு நிரந்தர வேலை கிடைக்க... கட்டட வேலைக்கு பணத்தேவைகள் சந்திக்கப்பட... சகோதரி. மேரி அவர்களுக்கு சரீரத்தில் காணப்படுகிற பலவீனம் மாற... இங்கு ஆலயம் கட்டப்பட... தாயார் சுப்புலட்சுமி அவர்கள் ஞானஸ்நானம் பெற.... அவர்களுடைய குடும்பம் இரட்சிக்கப்பட... சகோதரி. பர்வீன் அதிக மதிப்பெண் பெற... சகோதரி. ஜெயமணிக்கு கர்ப்பபையில் காணப்படுகிற கட்டி நீங்க... சகோதரி. பேச்சியம்மாள் சமாதானம் ஏற்பட... அவருடைய கணவருக்கு காணப்படுகிற குடிப்பழக்கம் மாற... சகோ. காசிராஜன் வீடு கட்டி முடிக்க தேவையான பணம் கிடைக்க...

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை**

இங்கு ஊழியரின் பிள்ளைகள் எழுதியிருக்கிற அரசுத் தேர்வில் அதிக பட்ச மதிப்பெண்கள் பெற.... திருப்புளிங்குடியின் கட்டப்பட்டு வரும் ஜெபவீடு கட்டுமானப் பணிக்கு தேவையான ரூ. 2,50,000/- சந்திக்கப்பட.... சகோதரிகள் அஜிதா, ஆனந்தி, ராமலட்சுமி, சுசிலா, பிரியா, கார்த்திகா, ராஜலட்சுமி, சண்முகசுந்தரி இவர்கள் குடும்பங்கள் இரட்சிக்கப்பட... சகோ. துரை குடும்பத்தில் பிசாசின் பிடியில் இருந்து விடுதலை கிடைக்க... பிள்ளைகள் ரெஜினா, ஜெரோம் வியாதியிலிருந்து மீட்கப்பட...

பணித்தளம் : **தாதன்குளம்**

சகோதரர்கள், சுப்பையா, முருகன் ஆகியோர் குடிவெறியிலிருந்து விடுதலையாக.... சகோதரி. முருகம்மாளுக்கு ஆண்குழந்தையை கொடுக்க... சகோதரி லீலாவுக்கு ஆசிரியை வேலை கிடைக்க... VBS நடக்கும் இடங்களில் கர்த்தர் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய.... சகோதரி. ஞானத்திற்கு இளைப்பு வியாதி நீங்க...

பணித்தளம் : **புதுக்கோட்டை**

சகோ. எஸ்றா இவர்களது இல்லத்தில் நடைபெறுகிற அற்புதத்தின் மாலைக்கு கடந்து



வருகிற குடும்பங்களை கர்த்தர் ஆசீர்வதிக்க... சனிதோறும் நடைபெறுகிற பெண்கள் கூடுகைக்காக... தங்கை அன்யாவிற்கு நல்ல மதிப்பெண் கிடைக்க... நித்யாவிற்கு முதல் மதிப்பெண் கிடைக்க... தனபால் அதிகபட்ச மதிப்பெண்கள் பெற.. சகோ. முத்தையா இவர்களுக்கு கால்முறிவு குணமாக... சகோதரி வொ்ஜில் தகப்பனார் மைக்கேல் கால் எலும்பு தேய்வு குணமாக.... மாணவர் ஆலோசனைக் கூடுகை நடைபெற்ற பள்ளிகளில் 100% தேர்ச்சி பெற....

பணித்தளம் : **பட்டாண்டிவிளை**

தங்கை ஜெனிற்றாவை கர்த்தர் அபிஷேகிக்க... இங்குள்ள வாலிபர்கள் கர்த்தருக்குள் பலப்பட... தங்கை தோஸ்மா ஜெப ஆவியினால் நிரப்பப்பட... தங்கை சவுந்தவள்ளியின் தாயாருக்கு காலில் காணப்படுகிற பெலவீனம் மாற... சகோ. மோசசை கர்த்தர் இரட்சிக்க... சகோ. சவுந்தர்ராஜ் கடை தொழில் விருத்தியடைய.... சகோதரி. பாக்கியத்தாய் ஆசிரியை மகன் திருமணக்காரியம் நடைபெற... தங்கை ரூபிக்கு தேவன் வேலையைக் கொடுக்க... சகோ. பொன்ராஜ் இரட்சிக்கப்பட்டு, குடும்ப பிரிவினை மாற...

பணித்தம் : **தூத்துக்குடி – ரூரல்**

சகோ. ராஜசேகர் இரட்சிக்கப்பட... மனந்திரும்ப... சகோ. ராஜகுமார் இரட்சிக்கப்பட... மனந்திரும்ப... சகோதரி. கரோலின் இடுப்புக்குக் கீழ் உள்ள பகுதிகள் வலிக்கிறது. முதுகு தண்டுவடத்தில் ஒரு எலும்பு வளைந்து இருக்கிறது. பூரண சுகம் கிடைக்க.... ஞானம்மாள் என்ற தாயாருக்கு புற்றுநோயிலிருந்து விடுதலை கிடைக்க... சகோதரி. நிர்மலாவிற்கு திருமண தடை நீங்க... சகோ. செல்வகணேஷ்க்கு வேலை கிடைக்க... சகோதரி. செல்விக்கு நல்ல அரசாங்க வேலை கிடைக்க... சகோ. பென்னியின் மனைவி இறந்து விட்டார்கள். அவர்களுடைய அரசாங்க வேலை பென்னிக்குக் கிடைக்க... 10,+2 அரசாங்க தேர்வு எழுதும் பிள்ளைகள் தேர்வில் அதிகபட்ச மதிப்பெண்கள் பெற... சகோதரி. ஏஞ்சல் B.E. முடித்து இருக்கிறாள். அவளுக்கு ஏற்ற துணையை கர்த்தர் ஆயத்தப்படுத்த... தங்கை சோபியா தேர்வில் மறுமதிப்பீடு செய்தலில் தேர்ச்சியடைய.....

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **ஏழாயிரம் பண்ணை – தேவனுடைய கூடாரம்**

ஏழாயிரம் பண்ணை ஆலயத்தில் கொடுக்கப்படுகிற திறப்பின்வாயில் ஜெபம் நோட்டீஸ் வாங்குகிற அனைரும் ஜெபத்தில் கலந்து கொள்ள.... கோவிலம்மாள் என்ற சகோதரிக்கு இருக்கும் பலவீனம் நீங்க... ஞாயிறு பள்ளி தொடர்ந்து நடைபெற... சகோதரி. விஜயலட்சுமிக்கு சிறுநீரக பிரச்சனை நீங்கி, பூரண விடுதலை கிடைக்க... சிறுமி வீரலட்சுமிக்கு அதிகமாக இதயம் துடிக்கிற பிரச்சனை நீங்க...

பணித்தளம் : **ஜமீன் சல்வார்பட்டி**

நமது ஆலயத்திற்கு கதவு, ஜன்னல்கள் போடப்பட... நமது ஆலயத்திற்கு காம்பவுண்ட், முள்வேலி போட... ஊழியத்திற்கு ஒரு மோட்டார் சைக்கிள் கிடைக்க... அய்யனார் சகோதரர், கலைச் செல்வன் குடும்பத்தினர் தொடர்ந்து ஆலயத்திற்கு வர...

பணித்தளம் : **அய்யனேரி**

சகோதரி. ஜெயசீலி அவர்கள் மகன் திருமணத்திற்காகக.... குடும்ப சமாதானத்திற்காக... சகோ. வெங்கடேஷ் குடிப்பழக்கம் மாற... குடும்ப பிரச்சனையில் இருந்து ஒரு விடுதலை கிடைக்க... சகோதரி சுப்புலட்சுமி அவர்கள் மகன் திருமணத்திற்காக வீடு கட்டுகிறார்கள். அதன் தேவைகளுக்காக... தேவைகள் சந்திக்கப்பட... சகோதரி. ஈஸ்வரி

அவர்கள் குடும்பம் தொடர்ந்து ஜெபத்தில் கலந்து கொள்ள...

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்**

சகோ. முனுசாமி குடும்பம் இரட்சிக்கப்பட... டி.பி. நோய் முற்றிலும் குணமாக... சகோதரி. முருகலட்சுமியின் தலை சுற்று மாற... காணாமல் போன அவர்கள் கணவர் திரும்பி வர... கீழ செல்லையாபுரம், வெள்ளையாபுரம், கரிசல்பட்டி, கிருஷ்ணாபுரம், ரெட்டிபட்டி, கீழமேட்டூர், லேமேட்டூர் கிராமத்தில் சுவிசேஷத்திற்காக காணப்படும் தடைகள் நீங்க.... பிசாசில் போராட்டத்திலிருக்கும் ஒரு வாலிப சகோதரனுக்கு விடுதலை கிடைக்க...

பணித்தளம் : **புல்லக்கவுண்டன் பட்டி**

சகோதரிகள் மாரி ஆனந்த செல்வி இவர்களுக்கு ஆசீர்வாதமான கர்ப்பக்கனிகளுக்காக... சகோதரி. சுமதி இவர்கள் வீடுகட்டுமான பணியை தேவன் ஆசீர்வதிக்க... அரசுத்தேர்வு எழுதின மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் எடுக்க... சகோதரிகள் பரிசுத்தமணி, கவிதா, தேன்மொழி, லூர்துமேரி இவர்கள் சபைக்கு வர... விசுவாசிகள் ஜாண்பீட்டர், அன்னபாக்கியம், லூர்துமேரி, அந்தோணிசாமி இவர்களுக்கு கர்த்தர் நல்ல சுகம் கொடுக்க...

பணித்தளம் : **முக்கூட்டுமலை**

சகோதரர்கள் துரை, பாண்டி, காளியப்பன் சகோதரிகள் மாடத்தி, முனீஸ்வரி, முல்லைக்கொடி இரட்சிக்கப்பட... சகோ. ரமேஷ் கண்ணன் குடும்பத்தில் பிரச்சனை நீங்க... மாணவி லதா படிப்பில் நல்ல மதிப்பெண் எடுக்க.. சகோ. பொன்மாரியப்பன் அசுத்த ஆவியில் இருந்து விடுதலை கிடைக்க...

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

சகோதரி. விக்டோரியாவிற்கு நல்ல வாடகை வீடு கிடைக்க... சகோதரி பாப்பாவிற்கு கடன் பிரச்சனையிலிருந்து விடுபட... சகோதரி. முத்துமாரிக்கு ஐந்தாண்டுகளாகியும் குழந்தை இல்லை குழந்தை பாக்கியத்திற்காக... சகோதரி. சுகந்திக்கு திருமண தடை நீங்க... கட்டிட வேலைகள் (பணித்தள) சீக்கிரத்தில் கட்டி முடிக்கப்பட...

பணித்தளம் : **பழைய அப்பனேரி**

சகோதரி. எப்சிபா ஆலயத்திற்கு கடந்து வர... குடும்பம் முழுவதும் இயேசுவை அறிந்து கொள்ள... தங்கை தேவி அதிக மதிப்பெண்கள் பெற... சகோதரிகள் மேரி, ஜெயா ஆலயத்திற்கு கடந்து வர... தடைகள் மாற... மகன் சுரேஷ் இரட்சிக்கப்பட... மகன் பாஸ்கர், மருமகள் இயேசுவைக் கண்டு கொள்ள... சகோதரிகள் ரெஜிலா, ஸ்டெல்லா, சகோ. மாரிகண்ணு குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட..... சகோ. மரியாளின் கஷ்டம் மாற... மாணவர் கூடுகைகள் கர்த்தர் ஆசீர்வதிக்க... சகோ. ராஜேந்திரன் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட....

பணித்தளம் : **என். திருவேங்கடபுரம்**

நாட்டாமை மருமகளுக்கு சுக பிரசவம் ஆக... திரு. பர்னபாஸ் மகனுக்கு அரசு வேலை கிடைக்க... சகோ. பவுல் வீடு கட்டும் பணிக்கா... சகோதரி. சங்கீதாவிற்கு ஆப்பரேசனில்லாமல் இருதய வால்வு சரியாக செயல்பட.... சகோ. இளங்கோவின் மனைவி இரட்சிக்கப்பட... மகளின் குடும்ப சமாதானத்துக்காக....

பணித்தளம் : **சென்னல்குளம்**

சகோ. சமுத்திரத்தின் மனைவி பிரிந்து வாழ்கிறாள்கள். தாயில்லாமல் பிரிந்து வாழும் பிள்ளைகளுக்காக... சகோ. பாலமுருகன் (35 வயது) இடி இடித்ததில் மரணமடைந்தார். இவர் விட்டுப்போன குடும்ப ஆறுதலுக்காக... புது விசுவாசி தேவி ஆலய ஆராதனைக்கு



வர.... சகோ. முத்துக்கண்ணன், மணி ஆலயம் வர.... சகோ. பார்வதி இரட்சிப்புக்காக... சகோதரி. பொன்மலரின் குழந்தை பாக்கியத்துக்காக....

பணித்தளம் : **சிவகாசி – ரூரல்**

புதூர், ஆசாரிகாலனி, மானகசேரி ஆலயமில்லா இக்கிராமங்களில் திறந்த வாசல் உண்டாக.... மாணவன் ஜெரோமுக்கு கையில் உள்ள பலவீனம் மாற... சகோ. மரியதாசுக்கு கால் பலவீனம் மாற... நடக்க இருக்கும் கிராமங்களில் 600க்கும் அதிகமான பிள்ளைகள் சந்திக்கப்பட..... சகோ. ஆறுமுகம் அவர்களின் பக்கவாதம் மாற... சகோ குமார் அவர்களின் மனநிலை பாதிப்பு மாற... புதிய ஜெபக்குழுக்கள் ஆசீர்வதிக்கப்பட... முனீஸ்வரன் என்ற மாணவன் இரட்சிக்கப்பட...

சகோதரி. எஸ்தர் ஜுன் 3ம் தேதி எழுதப்போகும் தேர்வுக்காக... கர்ப்பத்தின் கனியை கர்த்தர் ஆசீர்வதிக்க... சகோ. கருப்பசாமி இரட்சிக்கப்பட... சகோதரி. நாகலட்சுமி அவர்களுக்கு வரவேண்டிய பணம் தடையின்றி வர... அரசுத்தேர்வு எழுதிய ஜெனி, ஜெரோம், சிவா அதிக பட்ச மதிப்பெண்கள் எடுக்க... சகோதரி. நந்தினிக்கு கர்ப்பத்தின் கனிக்காக... முத்துசாமிபுரத்தில் ஆலயம் கட்ட இடம் கிடைக்க... சகோ. பாலகிருஷ்ணனுக்கு வேலைக்கான அழைப்பு கிடைக்க...

## திருநெல்வேலி மாவட்டம்

பணித்தளம் : **அத்தியூத்து**

VBS–ல் சிறுவர், சிறுமியர் தடையில்லாமல் கலந்து கொள்ள... சகோதரிகள் சுந்தரி, ஈஸ்வரி, ஆசா, விவேகா இவர்களின் குழந்தை பாக்கியத்துக்காக... சகோதரி. கல்யாணி வயிற்றில் கட்டி கரைய... சகோ. மாடசாமி கால்புண் ஆற... சகோதரி. சொர்ணம் கால் வாதம் நீங்க... சகோதரி முத்து மரண பயம் நீங்க.... சகோதரி. பெருமாள் இடுப்பு எலும்பு தேய்வு சரியாக... சகோதரி மகேஷின் கர்ப்பம் பாதுகாக்கப்பட... குழந்தை எந்த நோயும் இல்லாமல் பிறக்க... சகோ. சப்பாணிகுமார் நெஞ்சுவலி நீங்க.... சகோ. பேச்சிகுட்டி பைத்தியம் நீங்க... சகோதரி. சுப்பு நெஞ்சில் கேன்சர் வியாதி நீங்க... சகோதரி. பிச்சம்மாள் பெண்சன் வர.... சகோ. விவின் கல் அடைப்பு நீங்க... சகோதரி. பேச்சியம்மாள் கேன்சர் வியாதி நீங்க...

பணித்தளம் : **வடமலாபுரம்**

சுரண்டையிலுள்ள சகோ. ராஜ் டெய்லரிங் வேலை பார்க்கிறார். கீழே விழுந்து கை உடைந்து விட்டது. இவர் தொடர்ந்து வேலை செய்ய.... மனக்குழப்பம் இல்லாமல் உற்சாகமாய் செய்ய... சகோதரி. சுஜி திருமணமாகி 6 மாதத்தில் குடும்பம் பிரிந்தது. இவர்கள் இணைக்கப்பட.... சகோ. ஜாண் பெற்றோருக்கு கீழ்ப்படிதலுள்ள பிள்ளையாய் நடக்க... இங்கு ஆலயம் செல்ல வாகன வசதி கிடைக்க... சகோ. முருகேசனுக்கு திருமண தடை நீங்க.... சகோ. மாடசாமி தொடர்ந்து சபைக்கு வர... சகோ. முருகனுக்கு குடும்பப் பிரச்சனை நீங்க....

பணித்தளம் : **மைப்பாறை**

VBS நடத்த ஆசிரியைகள் கிடைக்க, சிறுவர் சிறுமியர் இரட்சிக்கப்பட... சகோ. யோபு வீடுகட்ட தேவன் உதவி செய்ய... சகோதரி டெய்சி திருமணம் நன்றாக நடக்க... சகோ. ஆல்பர்ட் திருமணம் நன்றாக நடக்க... சகோதரி. அபி என்ற மாணவிக்கு இழுப்பு வியாதி நீங்க.... சகோதரி. கோப்பம்மாளின் கால் நன்றாக நடக்க.... சகோதரி முத்துவிற்கு திருமணம் ஒழுங்காக...

பணித்தளம் : **திருவேங்கடம்**

சகோதரி. ஜோதி குடும்பம் ஆசீர்வதிக்கப்பட... சகோ. கணேசன் குடும்பம் இரட்சிக்கப்பட.... சகோதரி. அன்னமேரிக்கு காலில் காணப்படுகிற வலி நீங்க... சகோ. வேலுச்சாமிக்கு காலில் உள்ள புண் குணமாக... சகோ. மாரியப்பன் பூரண சுகம் பெற... சகோதரி. சங்கீதாவின் திருமணம் கைகூடி வர... சகோதரி. ஈஸ்வரியின் கர்ப்பத்தின் கனிக்காக... இவர் கணவர் இயேசுவை ஏற்றுக்கொள்ள... சகோ. சரவணன் திருமண காரியம் நடைபெற... விவசாயம் ஆசீர்வதிக்கப்பட... திருவேங்கடத்தில் இப்பேரூராட்சி அலுவலகத்தில் ஆலயம் கட்ட தடையில்லா சான்று கிடைக்க.... சகோ. பால்துரையின் பால்பண்ணைக்கு இருக்கிற எதிர்ப்பு மாற... சகோதரி. ரெபேக்காள் +2வில் அதிக மதிப்பெண் பெற..... சகோ. பிரபுக்கு சொந்தமான 2 ஏக்கர் நிலம் அவருக்கே கிடைக்க... சகோ. முத்துசெல்வன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற.... கல்லூரி படிப்பைத் தொடர... சகோதரி. லட்சுமி குடுமபத்தில் காணப்படுகிற சமாதான குறைவு நீங்க... சகோ. சின்னச்சாமி வயிற்றுவலி நீங்க...

பணித்தளம் : **அழகப்பபுரம்**

சகோதரி. அருளம்மாள் காணிக்கை வாங்க செல்லும்போது ஏற்பட்ட கால்சுளுக்கு நீங்க... VBS க்கு தன்னார்வ ஊழியர்கள் கிடைக்க... சகோ. ஜெபராஜ புதிய கடை சீக்கிரத்தில் கட்ட... நம் மிஷனெரி சகோதரனின் தாயுக்கும், தகப்பனுக்கும் மனுஷர் கண்களில் தயவும், தேவகிருபையும் கிடைக்க... சகோதரி. கோமதி அவர்களின் மகனுக்கு (5வயது) டைபாயிடு காய்ச்சல் குணமாக சகோதரிகள் ராமலட்சுமி கனகா இவர்கள் புதிதாய் ஆலயத்திற்கு கடந்து வர... சகோதரி. இன்பம் பின்மாற்றத்திலிருந்து மனந்திரும்ப...

பணித்தளம் : **பாளையங்கோட்டை**

சகோ. மோகன் சுகம் பெற... வடக்கு தாழையூத்தில் வசிக்கும் நமது முன்னாள் ஊழியர் டேவிட் அவர்கள் மகளுக்கு சீக்கிரத்தில் திருமணமாக சகோ. சாலொமோன் அவர்கள் மகளுக்கு சுகபிரசவம் உண்டாக... சகோ. சுவாமிதாஸ் அவர்கள் கால் நடக்க முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பூரண சுகம் பெற... ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் சகோதரி அன்னாளுக்கு பூரண சுகம் கிடைக்க...

பணித்தளம் : **மேலச்செவல்**

சகோதரிகள். செல்லமணி, அமுதா, மலையாச்சி, ஜெயகனி, வள்ளி இவர்கள் குடும்பம் இரட்சிக்கப்பட... இவர்கள் ஜெபிக்க வருகிறவர்களை தடை செய்யாமலிருக்க... சகோதரி. கவிதா துணி தைக்கும்போது கண்ணில் ஊசி குத்திவிட்டது. கண்ணில் பாதிப்பு ஏற்படாமல் இருக்க... சகோதரி. புஷ்பலதாவிற்கு காய்ச்சலால் உடம்பு முழுவதும் கொப்பளங்கால் இருக்கிறது. அது குணமாக... அவர்கள் மகள் பிரியா அரசுத்தேர்வில் நல்ல மதிப்பெண் பெற.... சகோ. ஆத்தியப்பன் குடிப்பழக்கம் மாற... சகோதரி. ரெஜியின் கணவருக்கு எரிச்சல் மாற... இரட்சிக்கப்பட... சகோதரி லதாவின் பிள்ளைகள் அரசுத் தேர்வில் அதிகபட்ச மதிப்பெண் பெற... சகோதரி. தமிழரசி திருமணம் கைகூடி வர... சகோதரி வேல்சுந்தரி பிசாசுபிடியிலிருந்து இரட்சிக்கப்பட... அவர்கள் குடும்பமாக மனந்திரும்ப... சகோதரி. பால்கனிக்கு குழந்தை கிடைக்க... சகோதரி எஸ்தரின் 3 குழந்தைகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் தடுக்க....

## திண்டுக்கள் மாவட்டம்

பணித்தளம் : **தொப்பம்பட்டி**



இங்கு நடத்த இருக்கும் தடைகள் நீங்க... சிறுவன் அஜய்க்கு இளைப்பு வியாதி நீங்க.... சகோ. ராஜபாண்டி குடிப்பழக்கத்திலிருந்து மனந்திரும்ப... சகோதரி. பழனியம்மாள் சுகர் வியாதி சுகமாக... சகோ. அழகர்சாமி காலில் உள்ள புண் ஆற... சகோதரி. உமாவிற்கு குழந்தை பாக்கியம் உண்டாக... சகோதரி. முத்துசெல்விக்கு ஏற்ற வேளையில் திருமணமாக.... ரோஜா என்ற 3 வயது சிறுமி எழுந்து நடக்க... ரபீனா என்ற சிறுமிக்கு டைபாய்டு சுகமாக.... சகோ. பால்ச்சாமியின் குடும்பம் இரட்சிக்கப்பட...

பணித்தளம் : **விராலிப்பட்டி**

சகோதரி. முத்துமீனா விஷத்திலிருந்து பாதுகாக்கப்பட.... வாலிப சகோதரி முத்துராணிக்கு கிட்னி, இருதயநோயிலிருந்து பாதுகாக்கப்பட... சகோதரி. பழனியம்மாவுக்கு கண்பார்வை கிடைக்க... சகோ. விழா பாண்டி, சகோதரி பாண்டீஸ்வரி நன்றாக படிக்க... சகோதரி. அழகம்மாவின் சுகபிரசவத்திற்காக... சகோதரி. சித்திரா தேவியின் திருமண தடை நீங்க... சகோதரிகள் முருகவள்ளி, மகாலட்சுமி, பேச்சியம்மாள், முனியம்மாள், லட்சுமி, முருகேஸ்வரி, வள்ளியம்மா, முருகாயி இவர்கள் குடும்பத்தில் இருக்கும் கஷ்டங்கள் நீங்க

## திருப்பூர் மாவட்டம்

பணித்தளம் : **பொங்கலூர்**

புதியதாய் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களை கர்த்தர் பாதுகாக்க... ஆலயம் கட்டுமானப் பணி சீக்கிரம் ஆரம்பிக்கப்பட... விசுவாசிகள் ஆராதனைக்கு தடை இல்லாமல் வர... சகோதரிகள் சுதா, நதியா ஆகியோரை கணவன்மார் ஆராதனைக்கு போக தடைசெய்கிறார்கள். இவர்கள் மனம் திருபி ஆராதனைக்கு வர... சகோ. விஸ்வநானனுக்கு கர்த்தர் ஏற்ற துணையை கொடுக்க... கர்த்தர் ஊழியராகிய எங்களை பாதுகாக்க...

## மதுரை மாவட்டம்

பணித்தளம் : **திரளி**

சகோ. கிதியோன் குடியிலிருந்து விடுபட.... ஆராதனையில் கலந்து கொள்ள... மேரி அம்மா மகனுக்கு ஏற்ற துணை கிடைக்க... ஆலய ஆராதனைக்கு விசுவாசிகள் தடையில்லாமல் வர... வாஞ்சையோடு வர.... சகோ. பிச்சமணி தற்கொலை எண்ணத்திலிருந்து விடுபட.... இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வர....

---

3ம் பக்க தொடர்ச்சி

தாய் மற்றும் சகோதரர்களுக்கு Phone செய்தார்கள். அவர்கள் என்னை தூத்துக்குடி AVM Hospital-லில் admit செய்தார்கள். அங்கே எனக்கு CT மற்றும் AVM எடுக்கப்பட்டது. Result–ல் இது பக்கவாதம் எழும்பி பூரணமாக நடக்க ஆறு மாத காலம் ஆகும் என்று சொல்லிவிட்டார்கள். தேவனுடைய பிள்ளைகளோ எனக்காக ஜெபம் செய்தார்கள். 5 நாட்கள் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்தேன். ஆனால் தேவனோ என்னை ஆறே நாட்களில் நடக்கும்படியான கிருபை செய்தார். டாக்டர்களோ இது உண்மையிலே Miracle என்று ஆச்சரியப்பட்டார்கள். இப்பொழுது நான் நன்றாக நடக்கிறேன். இயேசு அப்பா எனக்கு புதிய ஜீவனைத் தந்தார். அவருடைய நாமத்திற்கே கோடான கோடி ஸ்தோத்திரம். ஆமென் அல்லேலூயா!

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதரி
கோ. விமலா தூத்துக்குடி

# தேவன் சம்பாதித்த தமது சபை

பா. பொற்செல்வன் ஆசீர்

தேவன் தம்முடைய சுயரத்தத்தினலே சம்பாதித்துக் கொண்ட தமது சபை என்ற அப். 20:28இல் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறதை காண்கிறோம்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் பெற்றுக் கொண்ட சிலாக்கியங்கள், பெற்றுக்கொள்கிற சிலாக்கியங்கள் ஏராளம்.

**இயேசுகிறிஸ்துவின் இரத்தம்**

- சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது. 1யோவான் 1:7
- நமது மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிக்கிறது. எபி. 9:14
- நித்திய மீட்பு உண்டாயிற்று. எபி. 9:12, எபே. 1:7
- நம்மை நீதிமான்களாக்கியிருக்கிறது ரோமர் 5:9
- தேவனுக்கு சமீபமாக்கிற்று எபே. 2:13
- பிசாசை ஜெயிக்க நமக்கு பலன் அளிக்கிறது. வெளி. 12:11

இப்படி வேதம் இயேசுவின் இரத்தத்தினால் நாம் பெறும் சிலாக்கியங்களை பட்டியலிடுகிறது. இந்த பட்டியலில் பவுல் அப்போஸ்தலன் சபையானது இயேசுகிறிஸ்துவின் இரத்ததினால் சம்பாதிக்கப்பட்ட அவருடைய சொந்த சம்பத்து எனச் சுட்டிக் காட்டுகிறார்.

அநேக நேரங்களில் சபை என்றவுடன் நாம் தேவனை ஆராதிக்க பயன்படுத்தப்படும் ஒரு கட்டிடத்தைத் தான் நினைவில் கொள்கிறோம். ஆனால் வேதம் கட்டிடத்தைக் குறித்துப் பேசவில்லை. வேதம் சபை என்று சொல்லும்போது தேவனை ஆராதிக்கக்கூடும் நம்மைச் சுட்டிக் காட்டுகிறது என்பதை மறக்கக்கூடாது.

நீங்கள் எந்த சபையைச் சேர்ந்தவர்கள் என்ற கேள்வி கிறிஸ்தவர்களின் பரவலான உணர்ச்சிப்பூர்வமான கேள்வியாக உள்ளது. இந்தக் கேள்வி எழுவதை வேதம் சுட்டும் சபை அர்த்தத்தில் இல்லை என்பதை உணர்வோர் எத்தனை பேர்? இக்கேள்வி நிர்வாக ரீதியான அமைப்பை குறிப்தேயல்லாமல் வேதம் சுட்டும் சபை பற்றியதல்ல. சபை என்பது ஒரு உயிரோட்டமுள்ள விசுவாசிகளை நடத்திச் செல்லும் உயிரற்ற அமைப்பை குறிப்பதல்ல. அது உயிரோட்டமுள்ள விசுவாசிகளையே குறிக்கிறது என்பதை உணர்வது நமக்கு அவசியம்.

வேதத்தில் புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களில் 17 புத்தகங்களில் சபை என்ற பதம் 114 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வேதம் சுட்டும் சபையை கிறிஸ்து தமது இரத்தத்தினாலே தமக்கு சொந்தமாக்கியிருக்கிறார். இந்த சபையை கிறிஸ்துதாமே தம்மையே அஸ்திபாரமாகக் கொண்டு கட்டுவதாக கூறியிருக்கிறார். (மத். 16:18, 1பேதுரு 2:4,5)

இந்த சபை எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும்? என்று வேதம் கூறுகிறது. சிலுவையில் இயேசு சிந்தின இரத்தத்தினாலே சம்பாதிக்கப்பட்ட அந்த சபையை குறித்து இந்த சிலுவை தியான நாட்களில் சிந்திப்பது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும்.

**மீட்கப்பட்ட சபை**

அப். 2:47 இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்.

ஆதி அப்போஸ்தலர் நாட்களில் இரட்சிக்கப்படுகிறவர்கள் மாத்திரமே சபையில்



அங்கத்தினர்களாக இருந்தார்கள். அதுவும் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தரே சபையில் சேர்த்து வந்தார் என வசனம் தெளிவாக கூறுகிறது. மேலும் ஒவ்வொரு நாளும் இரட்சிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கையும் அதிகமாயிருந்தது. அப். 4:4, 5:14, 12:24.

ஆனால் இந்த நாட்களில் இரட்சிக்கப்படுகிறவர்கள் மாத்திரமா சபையில் இருக்கிறார்கள்? ஆத்துமாக்களை கர்த்தர்தான் சபையில் சேர்த்து வருகிறாரா? இரட்சிக்கப்படுகிறவர்களின் கூட்டம் எவ்வளவாயிருக்கிறது? கர்த்தரால் மீட்கப்பட்ட ஒரு சபையில் குடிகாரர், வாக்குவாதம் பண்ணுகிறவர்கள், சுயநலவாதிகள் அங்கம் வகிப்பார்களா? இல்லவே இல்லை.

இயேசுகிறிஸ்து ஒருநாள் எருசலேம் தேவாலயத்திற்கு சென்றபோது அங்கு ஆடுகள், மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிவர்களையும், காசுக்காரர்கள் உட்கார்ந்திருப்பதையும் பார்த்தபோது சவுக்கை உண்டுபண்ணினார் அல்லவா? இந்த நாளில் கர்த்தர் அப்படி சவுக்கை எடுப்பாரானால் யார் தான் சபையில் அங்கம் வகிக்க முடியும்? சற்று ஆராய்ந்து பாருங்கள். இயேசுவை ஏற்றுக்கொண்டு, அவர் அருவருக்கும் காரியங்களை உங்களை விட்டகற்றி மீட்கப்பட்டவர்களாய், உண்மையாய் அங்கம் வகியுங்கள்.

**துதிக்கும் சபை**

அப். 2:47 தேவனைத் துதித்து ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்.

அப்போஸ்தலர்கள் தேவனைத் துதிக்கும்போது ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவுப் பெற்றிருந்தார்கள் என்று பார்க்கிறோம். கர்த்தரை துதிக்கும்போது கிருபைகள் பெருகும்2கொரி. 4:15 கர்த்தரை இஸ்ரவேல் ஜனங்கள் துதித்துப் பாடினபோது எரிகோவின் மதில் நொறுங்கி விழுந்தது. யோசுவா 6:20. யோபு பக்தன் கர்த்தரை துதித்தார் யோபு 1:21. இழந்தவைகளை இரட்டிப்பாய் பெற்றுக்கொண்டார். யோபு 42:10. இயேசு கிறிஸ்துவும் பிதாவை ஸ்தோத்திரிக்கிறார் யோவான் 11:41. இதினிமித்தம் மிகப் பெரிய அற்புதம் நடந்தது. மரித்துப்போன லாசரு கல்லறையில் வைக்கப்பட்டு நான்கு நாட்களுக்குப் பின்னர் (யோவான் 11:17) உயிரோடு எழுந்தான். யோவான் 11:44. துதித்தலில் இருக்கும் இரகசியம் தான் எத்தனை.

இன்று உயர் அதிகாரிகளின் கண்களில் தயவுபெற வேண்டுமா? அதற்காக நீங்கள் எதனைப் பயன்படுத்துகிறீர்கள்? சற்று ஆராய்ந்து பாருஙகள். வாழ்க்கையில் தோல்விக்கு மேல் தோல்வியா? தேவனைத் துதித்துப் பாருங்களேன். நிச்சயம் வெற்றி உண்டு.

**ஒரு மனமுள்ள சபை**

அப். 2:46, அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்தார்கள். அப். 2:1 ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப். 2:44 விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்தார்கள்.

அப்போஸ்தலர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்தில் கூடியிருந்ததையும், அவர்கள் மத்தியில் ஒருமனம் இருந்ததையும் நாம் வாசிக்கிறோம். மத். 18:19இல் இயேசு கிறிஸ்துவும் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று சொல்லியிருக்கிறார். ஒருமனம் பிதாவின் கரத்தையே அசைக்கிறது.

இதின் இரகசியத்தை புரியாத அநேகர் இன்று தனித்தனி பிரிவுகளாக

செயல்படுகின்றனர். ஒரே இடத்தில் கூடுகிற நம் மத்தியில் ஏன் பல சண்டைகள்? இதற்கு காரணம் ஒருமனம் இல்லாமையே.

ஒருமனம் இல்லாத இடத்தில் சமாதானம் குறைகிறது. கர்த்தருடைய கரத்திலிருந்து பெற வேண்டிய நன்மைகளும் தடுத்து நிறுத்தப்படுகிறது. ஆதலால் இன்று ஒருமனத்திற்கு உங்களை அர்ப்பணிப்பீர்களா?

**வல்லமையுள்ள சபை**

அப். 2:43 அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும், அடையாளங்களும் செய்யப்பட்டது.

இயேசுகிறிஸ்துவின் நாட்களில் அவர் அநேக அற்புதங்களை செய்தார். அதனை தொடர்ந்து அப்போஸ்தலர்களாலேயும் அற்புதங்கள் நடந்தது இதனை நாம் வேதத்தில் காண்கிறோம்.

நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் என்று இயேசுகிறிஸ்து கூறியிருக்கிறார் யோவான் 14:12. ஆனால் ஏன் இன்று நம் மூலும் அதுபோன்று அற்புதம் நடைபெறவில்லை. இதனுடைய உண்மையான இரகசியம் இயேசுகிறிஸ்துவினிடத்தில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தின் குறைவுதான். அவர் சகல வல்லமைகளையும் நம்முடைய கரத்தில் தந்திருக்கிறார். அதை பயனப்டுத்துவதும் பயன்படுத்தாமலிருப்பதும் நம்முடைய கரத்தில்தான் இருக்கிறது. தேவனுக்காக எழும்பி தேவனுடைய வல்லமையை தேசத்தில் வெளிப்படுத்துவோம்.

**ஜெபிக்கும் சபை**

அப். 2:42 ஜெபம் பண்ணுதலில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

அப்போஸ்தலராகிய பேதுருவும், யோவானும் ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்தில் தேவாலயத்துக்குப் போனார்கள். அப். 3:1. இவர்கள் மூலம் கர்த்தர் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை செய்தார். தாயின் வயிற்றில் சப்பாணியாய் பிறந்த ஒருவன் சுகம் பெற்றதைக் காண்கிறோம். இதனுடைய இரகசியம். அப்போஸ்தலர்களான இவர்கள் ஜெபிக்கிறதற்காக தனியாக நேரம் குறிப்பிட்டு, அந்த நேரத்தை சரியாக பயன்படுத்தினார்கள். சரியான இடத்தை தெரிந்தெடுத்து, தேவாலயத்திற்கு சென்று ஜெபித்தார்கள்.

இன்று நம்முடைய வாழ்க்கையில் ஜெபத்திற்கு முக்கியத்துவம் உண்டா? ஜெபிப்பதற்கென்று தனியாக நேரம் குறிப்பிட்டிருக்கிறோமா? தனியான இடத்தை தெரிந்தெடுத்திருக்கிறோமா? ஜெப நேரத்தை எப்படி பயன்படுத்துகிறோம்? ஜெபநேரத்தில் நம்முடைய தொலைபேசி ரிங்காரம் இடும்போது அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ? இல்லை தொடர்ந்து ஜெபிக்கிறோமா? ஆதாலால் ரோமர் 12:12 கூறுவது போல ஜெபத்தில் உறுதியாய் தரித்திருங்கள். உங்களுடைய வாழ்விலும், உங்களைக் கொண்டும் கர்த்தர் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்வார்.

**செவிகொடுக்கும் சபை**

அப். 2:42 அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் உறுதியாய் தரித்திருந்தார்கள்.

கழுதையைத் தேடப்போன ஒரு சவுலை கர்த்தர் தெரிந்து கொண்டு இராஜாவாக உயர்த்தி ஆசீர்வதித்தார். 1சாமு. 10:24. ஒருநாள் கர்த்தர் அவனைப் பார்த்து



அமலேக்கியரை மடங்கடித்து அவனுக்கு உண்டான அனைத்தையும் சங்கரித்துப் போடும்படி கூறினார். பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம் என்பதை சவுல் மறந்து போனான். அவன் எல்லாவற்றையும் அழித்துப்போட மனமில்லாமல் நலமானவற்றை தப்ப வைத்து அற்பமானவைகளையும், உதவாதவைகளையும் அழித்துப்போட்டான். கர்த்தருடைய சத்தத்திற்கு செவிக்கொடுக்காமற்போன அந்த சவுல் ராஜ்யபாரத்தை இழந்தான். அவனுடைய முடிவு மிகவும் பரிதாபம் 1சாமு. 15ம் அதிகாரம்.

இன்று நாம் ஆலோசனை மாத்திரம் இலவசமாக கிடைக்கும் என்று ஜாலியாகப் பேசிக் கொள்வோம். அப்படி அல்லாது சாமுவேலைப் போல சொல்லும் அடியேன் கேட்கிறேன் (1சாமு. 3:10) என்று கர்த்தருடைய சத்தத்திற்கு செவி கொடுக்க அர்ப்பணிப்பீர்களா?

வளரும் சபை

அப். 2:41 அன்றையத்தினம் ஏறக்குறை மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். ஒரு பிரசங்கத்தை கேட்டு மூவாயிரம்பேர் சபையில் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். அப். 4:4 வசனத்தைக் கேட்டு விசுவாசித்தவர்களில் தொகை ஐயாயிரமாயிருந்தது. ஆனால் இன்று நாம் எத்தனை பிரசங்கம் பண்ணியிருக்கிறோம்? அதில் மனந்திரும்பியவர்களின் எண்ணிக்கை தான் எத்தனை? எத்தனை பிரசங்கம் பண்ணினோம் என்பது முக்கியமல்ல. மனந்திரும்பியவர்களின் எண்ணிக்கை தான் முக்கியம். ஏன் இன்று வளர்ச்சியை காணமுடியவில்லை?

நிழல் தரும் மரத்தையும், கனி தரக்கூடிய மரத்தையுமே நாம் விரும்புகிறோம். இதினிமித்தம் எத்தனையோ பேர் பயன்பெறுகிறார்கள். நம்முடைய வாழ்விலும் கனி நிறைந்த சாட்சியின் ஜீவிதம் இருக்குமானால் வளர்ச்சியைக் காண முடியும். அப்போது ஏசாயா 60:3இன் படி உன் வெளிச்சனிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

கீழ்ப்படியும் சபை

அப். 2:41 வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். நம்முடைய விசுவாசத்தின் தகப்பன் என்னப்பட்ட ஆபிரகாமை கர்த்தர் அழைத்தார். அழைப்பின் சத்தத்தைக் கேட்ட ஆபிரகாம் உடனே புறப்பட்டுப்போனான். ஆதி. 12:1,4. கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து சென்ற ஆபிரகாம் தரித்திரம் அடைந்தாரா? ஏமாந்து போனாரா? இல்லவே இல்லை. மிருகஜீவன்களும் வெள்ளியும், பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயிருந்தான். ஆதி. 13:2. இயேசு கிறிஸ்துவும் பெற்றோருக்கு கீழ்ப்படிந்தார். லூக்கா 2:52. சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தார். பிலிப்பியர் 2:8. மேலும் பிதாவின் சித்தத்திற்கு பரிபூரணமாக அர்ப்பணித்தார்.

கீழ்ப்படிதல் என்பது மிகவும் கடினமான காரியம் தான். கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிய அர்ப்பணித்துப் பாருங்கள். நீங்களும் சீமானாய் மாறுவீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

**உணர்வுள்ள சபை**

அப். 2:37 இதை அவர்கள் கேட்டபொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்ளானார்கள். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி உணர்வடைந்தவர்களாய் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறதை நாம் அப். 2:37இல் காண்கிறோம்.

ஆனால் இன்று நாம் எப்படி இருக்கிறோம். எத்தனை சிலுவை தியான செய்திகள்? ஆனாலும் நாம் உணர்வடைந்திருக்கிறோமா? மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னனையையும் அறியும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறதே என்ற கர்த்தரின் அங்கலாய்ப்பை ஏசாயா 1:3இல் வாசித்து பாருங்கள். தேவனுடைய அங்கலாய்ப்பு எப்பொழுது மாறும்? இயேசுகிறிஸ்துவின் பாடு மரணங்களை தியானிக்கிற இந்த நாட்களில் நாமும் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாய் உணர்வடைந்து தீமையான காரியங்களை நம்மை விட்டு அகற்றுவோமா?

**ஆவியின் நிறைவுப் பெற்ற சபை**

அப். 2:4 அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்.

எதற்கு இந்த பரிசுத்த ஆவியானவர்? அவர் இல்லாமல் நம்மால் வாழ முடியாதா? அவசியம் பெற வேண்டுமா? என்ற கேள்வி இன்று அநேகருடைய உள்ளத்தில் எழும்புகிறதல்லவா. அப்படி அவசியம் இல்லையென்றால் யோவான் 20:22இல் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கமாட்டாரே.

தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான். தானி. 6:3. தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ (ஆதி. 41:38) என்று ஒரு தேசத்தின் ராஜா சாதாரண யோசேப்பை குறித்து கூறிய சாட்சியைப் பார்க்கிறோம். உங்களுடைய வாழ்வில் உயர்வு வேண்டுமா? பிறர் உங்களைக் குறித்து நற்சாட்சிக் கொடுக்க வேண்டுமா? இன்றே தேவசமூகத்தில் காத்திருந்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் உயர்த்தப்படுவீர்கள்.

ஒரு சபையின் தன்மையை வேதம் மேற்கண்ட விதங்களில் கூறுகிறது. இன்றைய நாளின் திருச்சபைகள், திருச்சபை தலைவர்கள், திருச்சபை அங்கத்தினர்கள் வேதவசனத்தின்படியான அனுபவத்தோடு வாழ ஜெபிப்போம். அர்ப்பணிப்போம்.


*தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : மே 29 கடைசி செவ்வாய்**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
**இடம் : காமராஜர் திருமண மண்டபம், பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**
*தேவனுடைய கூடாரத்தில்*
**திறப்பின் வாயில் ஜெபம்**
**2012 மே 30 கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
*நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்! இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!*
*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*
**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194




# உரையாடல்

Dr. P. செல்வராஜ், கோவை

நல்வாழ்வு நாம் எத்தகைய உரையாடலைப் பின்பற்றுகிறோம் என்பதைப் பொறுத்தது. உளவியலார் நேரடியான உரையாடலின் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்கள். மின்னனு தொழில்நுட்ப அடிப்படையில் நடைபெறும் தகவல் தொடர்பு நேரடியான உரையாடலின் இடத்தைப் பெற முடியாது.

தேவன் நம்மை அவரோடும், பிறரோடும் உரையாடும் தேவை உள்ளவர்களாகப் படைத்திருக்கிறார். பிறருடன் உரையாடாத மனிதர்கள் தேவனோடு உரையாடுவது எங்ஙனம் வேதாகமத்தில் தேவனோடு தனிப்பட்ட முறையில் உரையாடிய பலரைக் குறித்து வாசிக்கிறோம்.

1. “.... தேவன் அவனோடே (ஆபிரகாமோடு) பேசி ...” (ஆதியாகமம் 17:3)
2. “... நான் (யாக்கோபு) தேவனை ***முகமுகமாய்க்*** கண்டேன்...” (ஆதியாகமம் 32:30)
3. “ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே ***முகமுகமாய்ப்*** பேசினார்...’ (யாத்திராகமம் 33:11)
4. “... உங்களுடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கு உங்களிடத்தில் வந்து, ***முகமுகமாய்ப்*** பேசலாமென்று நம்பியிருக்கிறேன்” (2யோவான் 12)

நேருக்குநேர் பேசுவதற்கும் மின்னனு தொழில்நுட்ப உதவியுடன் தகவல் பரிமாற்றம் செய்வதற்கும் இடையில் பெரிய வேறுபாடு இருக்கிறது. நம்முடைய தகவல் தொடர்பில் 55 விழுக்காடு அங்க அசைவைச் சார்ந்தது என்றும், 38 விழுக்காடு குரலைச் சார்ந்தது என்றும், எஞ்சியுள்ள 7 விழுக்காடு மட்டுமே சொற்களைச் சார்ந்தது என்றும் ஆராய்ச்சி கூறுகிறது. கைபேசி அழைப்புகளும், செய்திகளும், மின்னனு அஞ்சல்களும் நேரடி உரையாடலாகாது எனலாம்.

Scott Hocfker எனும் ஆலோசகர் பலர் தன்னிடம் இவ்வாறு கூறுவதைக் குறிப்பிடுகிறார் :

“என்னுடைய கணவரும் நானும்”; “என்னுடைய மகனும் / மகளும் நானும்”; “என்னுடைய நண்பரும் நானும்” உரையாடவே முடியவில்லை. அப்போதுதான் பேசத்துவங்கியிருப்போம் ஏதாவது தடங்கல் ஏற்பட்டுவிடுகிறது. முகமுகமாய்ப் பேச முடியாத நாட்கள்! கீழ்க்கண்ட ஆலோசனைகளை அவர் பரிந்துரைக்கிறார் :

1. ஒவ்வொரு நாளும் யாருடனாவது முகமுகமாய்ப் பேச முயற்சி செய்யுங்கள்
2. கைபேசி / கணினியை ஒதுக்கிவிட்டு ஒருவருடன் நேரடியாகப் பேசுங்கள்.
3. ஒரு நாள் முழுவதும் கணினியுடன் நேரத்தை செலவிடாதிருங்கள்.
4. உணவு வேளைகளில் பழைய நண்பர்களை சந்திக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
5. தொழில்நுட்ப உதவியின்றி ஒருவரோடொருவர் தேவன் விரும்பும் நட்பைப்பேண முடியுமென்பதை நம்புங்கள்.
6. குழந்தைகளிடம் “போய் விளையாடு, அப்புறம் பேசுவோம்” என்று கூறுவதைக் தவிருங்கள்.
7. E-mail மற்றும் SMS உங்கள் மொழித்திறனையும் பாதிக்கக்கூடுமென்பதை மறவாதீர்கள்.

8. Chat மூலம் ஆபத்தான “உறவை” ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள்.

9. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கென்று ஒரு நேரமிருக்கிறது. ஆனால் பல நேரங்களில், இடங்களில் ஒருவரோடொருவர் நாம் உரையாட முடியும்.

நாம் ஜெபிக்கும்போது தேவனோடு பேசுகிறோம், அவர் நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறார், இல்லை, கவனித்துக் கேட்கிறார்!

## “அணுக்குளமாய் மாறும் கூடங்குளம்”

கண்ணாடியாலும் – பூதக்கண்ணாடி யாலும் – கூட (தினகரன், தினமலர், செய்திகள்)
பார்க்கக் கூடியதல்லாத இந்த “அணு”
அண்டத்தையும் அச்சுறுத்துகிறது! இது ஏன்?
அண்டசராசரத்தையும் பயமுறுத்துகிறது, எப்படி சாத்தியம்?
**“படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான்**
**அடைப்பை பிடுங்கிறவனை பாம்பு கடிக்கும்”** (நீதி. 10:8)
இது மனித தத்துவமல்ல...
தேவன் தன் ஆவியினால் மனுக்குலத்துக்கு எழுதிக் கொடுத்தது!
பூக்களைப் பார்த்து பூக்களைப்போல சிரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டிய நாமோ?
பூக்களைப் பாதுகாத்து பதப்படுத்தி விற்க கற்றுக்கொண்டவர்களானோம்!
சின்ன வியாபாரி பெரியவனானபோது சாமார்த்தியம் என்றோம்...
பெரியவன் மிகப் பெரியவன் என்றதும் சாதனையாளர் என்போம்....!
குறி தவறாத அம்பைப் பார்த்து சிறந்த வில்வித்தைக்காரன் என்போம்...
சீறிவரும் அம்பில் விஷம் பூசப்பட்டது என்றதும் அலறுகிறோம்!
மனுகுலமே..... மண் குலமே....
மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட மனுக்குலமே!
தேற்றுவதற்கென்ற உருவாக்கப்பட்டவள் தாய்,
அவளையும் தேற்ற இன்று “முதியோர் இல்லம்”...!
பார்வையுள்ளவனிடம் குருடனை கேட்டேன் “இவனை அவன் பாவம்” என்றான்
குருடனின் பார்வையுள்ளவனை கேட்டேன் அவனை இவன் பாவம் என்றான்...!

*கிறிஸ்தவம் சொல்லுகிறது*

**“எங்கள் பிதாக்கள் பாவம் செய்து மாண்டு போனார்கள்**
**நாங்கள் அவர்களுடைய அக்கிரமங்களைச் சுமக்கிறோம்!** (புலம்பல்5:7)

**Er. A. ஜெயபால்** Tuticorin.

## ஜெபியரங்கள் பங்கு பெறுரங்கள்

| மே | | |
|---|---|---|
| 2 | முழுஇரவு ஜெபம் | தேவனுடைய கூடாரம், ஏழாயிரம்பண்ணை |
| 5 | அற்புத உபவாச ஜெபம் | ஸ்ரீவைகுண்டம் காலை 10 – 2 |
| 8 | அற்புத உபவாச ஜெபம் | பிரமுத்து தேவர்விளை, தூ-டி. காலை 11 – 2 |
| 9 | முழுஇரவு ஜெபம் | தலைமை அலுவலகம், தூத்துக்குடி |
| 26 | அற்புத உபவாச ஜெப நாள் | மஞ்சம்பட்டி காலை 10 – 2 |
| 20 | அற்புத உபவாச ஜெபம் | மாதாநகர், தூத்துக்குடி காலை 11 – 2 |



## ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம்
## MECOGEN - V.B.S. - 2012 - ஜெபக்குறிப்புகள்

இவ்வூழியம் விசேஷமாக கிராம சிறுவர்களுக்காக ஆலயமில்லா கிராமங்களை மையமாக வைத்து நடத்தப்படும் ஊழியமாகும். இந்த ஆண்டு 325 கிராமங்களுக்கும் மேலாக ஒவ்வொரு கிராமங்களிலும் 6 நாட்கள் நடத்தி அதன்மூலம் 16,500 சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தைச் சொல்லத் திட்டமிட்டுள்ளோம்

1. வெளி 3:8இன்படி நாம் திட்டமிட்டபடி 325 கிராமங்களுக்கும் மேலாக கிராமங்களில் திறந்த வாசலை கர்த்தர் நமக்குத் தரும்படியாக...
2. சங். 49:2இன்படி சிறுபிள்ளைகள் செவிகொடுக்க...
3. மாற். 18:14இன்படி எல்லா சிறுவர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள...
4. ஏசா. 54:17இன்படி எதிர்ப்புகள் மாற...
5. தன்னார்வ ஊழியர்களைப் பயிற்றுவிக்க நடைபெறும் 2 நாட்கள் பயிற்சி வகுப்புகள் (6 இடங்களில்) தேவன் ஆசீர்வதிக்க..
6. இவ்வூழியத்திற்குத் தேவையான 400 தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்ப..
7. நமது ஊழியர்களுடன் தன்னார்வ ஊழியர்கள் கிராமங்களில் பணி செய்யும்போது சக. 9:8இன்படி தேவ பாதுகாப்பு இருக்க...
8. ஒரு சிறுபிள்ளைக்குச் சுவிசேஷம் சொல்ல ஆகும் செலவு ரூ. 50 வீதம் 16,500 பிள்ளைகளைத் தாங்கும் விசுவாச தேவ பிள்ளைகளை அனுப்பித்தர அல்லது ரூ. 2500 வீதம் கொடுத்து 1 VBS ஐ தாங்குவோரை தேவன் எழுப்ப...
9. கடந்த ஆண்டில் எதிர்ப்பினால் நடத்த முடியாமல் போன கிராமங்களில் தடைகளை மாற்றி, இந்த ஆண்டு நடத்த தேவன் கிருபை தர...

துதியுங்கள்

1 இந்த ஆண்டு VBSஇன் மொத்த தேவை **ரூ. 8 இலட்சத்து 12 ஆயிரத்து 500** சந்திக்கப்பட

2. நமது மிஷனெரிகளை தன்னார்வ ஊழியர்களை தேவன் வியாதி பெலவீனங்கள் தாக்காது காத்துக்கொள்ள....
3. VBS நடைபெறும் கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட தேவன் வாசல்களை திறக்க
4. VBS நடைபெறும் கிராமங்களில் தேவன் செழிப்பை ஆசீர்வாதத்தைக் கட்டளையிட
5. நடைபெற்ற 5 இரண்டு நாட்கள் VBS பயிற்சி முகாம்களை தேவன் ஆசீர்வதித்ததற்காக
6. VBS பயிற்சிகளில் கலந்து கொண்ட தன்னார்வ ஊழியர்களை தேவன் தம்முடைய ஆவியினால் பலப்படுத்த
7. 16,500 பயிற்சி புத்தகங்களை ரூ. 50000 கொடுத்து ஒரே நபரைக் கொண்டு தேவன் நமக்கு வாங்கித்ததந்ததற்காக
8. VBS 5பயிற்சிகளில் ஒரு பயிற்சியின் தேவையை ஒரு குடும்பத்தினர் ரூ. 25000 கொடுத்து தாங்கினதற்காக

*முப்பெரு முகாமிற்கான ஜெபக்குறிப்புகள்*

## வெற்றி முகாம்

இம்முகாம் நமது ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் சகோதர, சகோதரிகளின் ஆசீர்வாதத்திற்காக, ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நடைபெறும் வருடாந்திர முகாமாகும்.

1. வெற்றி முகாமின் தேவை ரூ. 60,000 சந்திக்கப்பட
2. ஏசா. 43:5-7 வசனங்களின் படி, தேவன் முகாமிற்கு வாலிப சகோதர, சகோதரிகளைக் கொண்டு வரும்படியாக....
3. ஏசா. 44:3இன்படி முகாமிற்கு வரும் சந்ததியும் சந்தானமுள்ள வாலிபர் மேல் பரிசுத்த ஆவியாவரையும், ஆசீர்வாதத்தையும் தேவன் ஊற்ற...
4. ஏசா. 49:25இன் படி பராக்கிரமன் பிசாசினால் சிறைப்படுத்தப்பட்டவர்களும், பெலவந்தன் சாத்தானால் கொள்ளையிடப்பட்டவர்களுமான வாலிபர்கள் அநேகர் அசுத்த ஆவியின் வல்லமையினின்று விடுதலையாகி இந்த முகாமில் இரட்சிக்கப்பட...
5. அப். 21:10இன்படி முகாமிற்கு வரும் வாலிபர்கள் தீர்க்கதரிசிகளாய் மாற....

## குதூகல முகாம்

இம் முகாம் நமது ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் சிறுவர்களின் ஆசீர்வாதத்திற்காக, ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நடைபெறும் வருடாந்திர முகாமாகும்.

1. இம்முகாமின் தேவை ரூ. 40,000 சந்திக்கப்பட....
2. ஏசா. 54:14இன் படி முகாமிற்கு வரும் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்பட சமாதானம் பெருக...
3. மத். 19:14இன்படி சிறு பிள்ளைகள் முகாமில் தடையில்லாமல் கலந்து கொள்ள..
4. மாற். 10:16 இன்படி முகாமிற்கு வரும் பிள்ளைகளை இயேசு அணைத்து ஆசீர்வதித்து பாதுகாக்கும்படி....
5. மத். 20:16இன்படி குழந்தைகள் பாலகர்களுடைய வாயினால் தேவனைத் துதிக்கும் துதி பெருக....

## வல்லமை முகாம்

இம்முகாம் நமது கிருபையின் ஊழியங்களின் மூலம் குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காக நடத்தப்படும் வருடாந்திர முகாமாகும்.

1. இம்முகாமின் தேவை ரூ. 75,000/- சந்திக்கப்பட...
2. வல்லமை முகாமிற்கு வரும் குடும்பங்களின் வீடுகள் அப். 12:12இல் உள்ள மரியாள் வீட்டைப் போல ஜெபவீடாக மாற...
3. அப். 2:17இன்படி முகாமிற்கு வரும் குமாரர், குமாரத்திகள், பெரியவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட...
4. அப். 10:24இன்படி முகாமிற்கு வரும் குடும்பத்தினர் கொர்நேலியு போல் உறவினர் சிநேகிதர்களைக் கிறிஸ்துவுக்காய் ஆதாயம் பண்ணுகிறவர்களாய் மாற... அவர்களை முகாமிற்கு தங்களுடன் அழைத்து வர...
5. அப். 10:44இன்படி வசனத்தைக் கேட்கிறவர்கள் யாவரின் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்க....



## செய்திகள்

- தபால்துறை நிறுவப்பட்டு தபால்நிலையம் உருவாகியது முதன்முதலாக இங்கிலாந்தில்தான். 14வது எட்வர்டு என்ற இங்கிலாந்து மன்னர் அரசு செய்திகளை மட்டும் அனுப்ப முதலாவதாக தபால் நிலையங்களை ஏற்படுத்தினார்.
- கி.பி. 1516இல் இங்கிலாந்தில் தபால்நிலையம் பொதுமக்களுக்காக செயல்பட துவங்கியது.
- கி.பி. 1840இல் மே மாதம் இங்கிலாந்தில் தபாலின் எடைக்கு ஏற்ப அஞ்சல்தலைகள் ஒட்டும் முறைமை ஏற்படுத்தப்பட்டு அஞ்சல்தலைகள் வெளியிடப்பட்டன. அப்போதைய இங்கிலாந்து மகாராணி பென்னிபிளாக் உருவப்படத்துடன் அஞ்சல்தலைகள் வெளிவந்தன. அதில் நாட்டின் பெயர் இடம் பெறவில்லை.
- பின்னர் பல நாடுகள் அஞ்சல் தலைகள் வெளியிட ஆரம்பித்ததால் நாட்டின் பெயர் அச்சிடும் பழக்கம் வந்தது.
- இந்திய இராணுவம் பராமரிப்பு செலவாக ஒரு ஆண்டிற்கு 2 இலட்சம் கோடி செலவழிக்கிறது.
- உலகிலேயே ஆயுதங்களை இறக்குமதி செய்யும் பெரியநாடு இந்தியாதான்.
- இந்தியாவில் 8 பாதுகாப்பு பொதுதுறை நிறுவனங்களும் 40 ஆயுத தொழிற்சாலைகளும் உள்ளன.
- உலகிலேயே அதிக அளவு தங்கத்தை (18,000 டன்கள்) பயன்படுத்தும் நாடு இந்தியாதான். இது அமெரிக்காவின் தங்க இருப்பைக் காட்டிலும் இருமடங்காகும்.
- இவ்வளவு தங்கத்தையும் இந்தியர்கள் கழுத்தில் காதில், கையில் மாட்டிக் கொண்டும், தங்க கட்டிகளாக வைத்துக் கொண்டும் சும்மா இருக்கிறார்கள் இந்தியர்கள் என்கிறது மெக்கின்ஸி என்கிற சர்வதேச ஆலோசனை நிறுவனம்.

### *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம் | | | |
| Grace Ministries | SBIN0007629 | SBI Bazaar, Tuticorin | 10237757808 |
| Grace Ministries | TMBL0000156 | TMB Ltd., Sipcot Tuticorin | 156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம் | | | |
| Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம் | | | |
| Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.